gistered No. M—236.

MADRAS

கிராமாதிகாரி.

சென்னை இராஜதானியின் கிராமபரிபாலனம் சீர்ப்படும்பொருட்டுப் பிரசுரிக்கப்படும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

நெ. 1] மணக்குடி:—1900-ஞு ஆகஸ்டு-மீ [புத். 1.

விஷயங்கள்,

1. இப் பத்திரிகை.
2. இப்போதுள்ள ஓர் பெருங்குறை.
3. திருத்துறைப்பூண்டித்தாலூகாவில் லேஜதபால்கிண்டம்
4. கிராமபரிபாலன விருத்தி.
5. ஓர் விண்ணப்பம்.
6. கிரிமினல் நடவடிக்கையின் விவரிப்பு.
7. கிராமாந்தரங்களில் செய்திருக்கவேண்டிய விஷயங்கள்—வைசூரி, சுகாதாரம்.
8. திருத்தமான 28-வது ஸ்டாண்டிங் ஆர்டர்.
9. சம்மனை நிராகரிப்பது.
10. பத்திரிகாபிவிருத்தி.
11. பரீட்சைக்கேள்விகள்.
12. 1308-ம் பசலியின் ஜமாபந்திரிபோர்ட்.
13. கிராம மாஜிஸ்டிரேட்டுகளும், போலீசரும்.
14. வர்த்தகம்.
15. பட்டுக்கோட்டை டிப்டி கலெக்டர் அவர்களுக்கு ஓர் விண்ணப்பம்.
16. ஓர் விருப்பம்.
17. சமாசாரக்குறிப்புகள்.

பத்திராதிபர்,
S. கோதண்டபாணித் தஞ்சராயர்,
மணக்குடி திருத்துறைப்பூண்டித்தாலூகா
தஞ்சாவூர்ஜில்லா.

கையொப்ப விபரம்:— வருஷம் 1-க்கு, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 3 இதரர்களுக்கு ரூ. 4. போஷகர்களுக்கு ரூ. 10.

Printed by:—T. B. Rengasami Pillay at the "Neelalochani Press" Negapatam, and Published by S. Kothandapani Thanjarayar Manakudy, Tiruturaipundi Taluk, Tanjore District.

Copy Right Registered.

REGISTERED
5 - OCT. 1900
MADRAS

THE GRAMATHIKARI.

கிராமாதிகாரி.

மாதம் ஒருமுறை பிரசுரஞ்செய்யப்படும்.

Vol I] மணக்குடி—1900ஷு ஆகஸ்டுமீ [No. 1

நம் பத்திரிகை.

எப்பொருட்கும் இறைவனுகிய எம்பெருமான் திருவருளை மேற்கொண்டு முன்னமே விளம்பரப்படுத்தியபடி 'கிராமாதிகாரி' என்னும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையை நாளது 1900-ஷு ஆகஸ்டு மீ முதலிருந்து வெளிப்படுத்த முன்வந்தோம். இது கருணைக்கடலாகிய கடவுள் கிருபையாலும், நல்லோர் ஆசிர்வாதத்தினாலும் மென்மேலும் விர்த்தியாகி நன்னிலைமைக்கு வருமென்று நம்புகிறோம் "வித்துவான் பலவான்." என்னும் பழமொழிப்படி எத்தேசத்தில் எவ்வகுப்பின ரிடத்தில் கல்வியறிவு அதிகப்பட்டிருக்கின்றதோ அத்தேசமும் அவ்வகுப்பினரும் அதிக நாகரீகம்பெற்று விளங்குவார்கள். கல்வி அறிவு மேம்பட்டிருப்பதே இங்கிலாண்டு தேசமும் ஐரோப்பியர்களும் அதிக நாகரீகமும் மேம்பாடும் அடைந்ததற்குக் காரணம் கல்விமான்களுடைய அறிவானது பத்திரிகைகள் மூலமாகவே உலகத்திலுள்ள சாமானிய ஜனங்களுக்குப் பெரும்பாலும் உபயோகப்படுகின்றது. நாகரீகமும் கல்வியறிவும் அதிகப்பட்டிருக்கும் தேசம் எதுவோ அவ்விடங்களிலெல்லாம் பத்திரிகைகள் அதிகப்பட்டிருக்கின்றன. இங்கிலாண்டு தேசத்தில் மாத்திரம் 22000-த்துக்கு மேற்பட்ட பத்திரிகைகள் வெளி

யிடப்பட்டு வருகிறதுந்தவிர ஒவ்வொருவலகைப் பத்திரிகைகளுக்கும் இலக்ஷக்கணக்கான சந்தாதாரர்கள் உண்டு. நம் சென்னை இராஜதானியிலோ உள்ளது மிகவும் சொற்பப் பத்திரிகைகளே அவைகளிலும் சென்னை யிராஜதானிக் கிராம உத்தியோகஸ்தர்களின் நன்மைக்காக வாதாடிநிற்கும் பத்திரிகை ஒன்றாவது இதுவரையில் இல்லாததினால் அதற்காக இவ்வித பத்திரிகை ஒன்று நடந்தேறின் மிகவும் பயன்படத்தக்கதென்று நமக்குத் தோன்றிய அபிப்பிராயத்தைப் பெரியோர் பலரிடமும் நேரில் தெரிவித்து அவர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டதுந்தவிரப் பல புத்திமான்களிடம் நேரிலும் கடிதமூலமாகவும் சம்பாஷித்ததில் அவர்கள் தங்களிடத்துள்ள அறிவைத் தன்னினத்தார்க்கு நிரப்ப இவ்வேற்பாட்டுக் குடன்பட்டு உதவி புரிவதாக நம்மையும் உற்சாகப்படுத்தினார்கள்; எல்லாப்புத்திமான்களையும் நாம் கேட்டுக்கொள்வதென்னவென்றால்; பொது நலப்பிரியர்களாகிய புத்திமான்களால் எழுதப்படும் விஷயங்களைத் தாங்கள் இப்பத்திரிகையின்மூலமாக வாசித்துப்பார்ப்பதுடன் தாங்களும் அடிக்கடி விஷயங்களை யெழுதிவரவும் நம்மினத்தாராகிய மற்றவர்களுக்கும் இதன் நன்மையைக்குறித்துக்காட்டி இப்பத்திரிகையின் பிரயோஜனத்தை யெடுத்துப் போதித்து இப்பத்திரிகையின் பிரயோஜனத்தையும் பத்திரிகையையும் விருத்திக்குக் கொண்டுவர வேண்டுகிறோம். சென்னை இராஜதானிக் கிராம உத்தியோகஸ்தர்கள் தினமானம் செய்யும் அவர்கள் உத்தியோகக் கடமைகளைச் சீர்திருத்தமாயும் நீதி வழுவாமலும் சமத்காரமாய் நடத்திவருவதற்கும் அவர்களுடைய விவகார ஞானத்தை விர்த்தியாக்கி அதனால் எல்லா ஜனங்களுக்கும் க்ஷேமத்தை உண்டாக்கும்பொருட்டு இப்பத்திரிகை யெழுதப்படுகிறது. இவ்வாங்கிலேய இராஜாங்கத்தின் அரசாட்சி சம்மந்தமான எல்லா விவகாரங்களுக்கும் இவர்கள் செய்யும் வேலைகளே அஸ்திவாரம். கிராம பரிபாலனை எப்பாடானது நன்னிலைமைக்கு வந்தால் அதனால் பிரஜைகள் பெருஞ்சுகம் அடைவார்கள் என்பது நாம் சொல்லாமலே அமையும்.

இப்போதுள்ள ஓர் பெருங்குறை.

நமது தாசில்தார், டிப்டி தாசில்தார், சப்மாஜிஸ்திரேட்டு அதிகாரத்தை வகித்த பலர் கவர்ன்மெண்டாருடைய உத்தேசத்துக்கு ஒவ்வாதவிதமாய்க் கிராம உத்தியோகஸ்தர்களை அவமதிப்பாயும் அதிகத் தாழ்வாயும் நடத்திக் கிராமபரிபாலன ஏற்பாட்டை வியர்த்தமாக்குகிறார்கள், அப்படிப்பட்ட அதிகாரிகளுடன் ஞாயவாதம் செய்து அவர்களுடைய சரியான கடமையைச் செலுத்திக் கிராமபரிபாலன ஏற்பாட்டை நன்னிலைமைக்குக் கொண்டுவரவேண்டிய விஷயத்தில் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவதே நம்முடைய முக்கிய நோக்கம். இப்படிப்பட்ட சம்பவங்களைத் திருஷ்டாந்தமாய் இந்த பத்திரிகையில் விரிவாய் எடுத்துக்கூறுவோம்.

திருத்தருப்பூண்டி தாலூகா வில்லேஜ் தபால் சி[illegible]டம்.

புதுஏற்பாட்டில் கிராமஉத்தியோகஸ்தர்களாகிய கர்ணம் முனிசிப்களுக்குச் சம்பளம் ஜாஸ்தி செய்[illegible]தோடு வெட்டி தலையாரியென்று அழைக்கப்பட்ட [illegible]ராமச்சேவகர் கிராமப் போலீஸ் என்ற சிப்பந்திகளும் கிராமங்க[illegible]தாரும் [illegible]டியமட்டில் சேமிக்கப்பட்டிருக்கிறது, அதிலும் ஏற்கனவே விசாரிப்பு என்று அழைக்கப்பட்டுவந்த கிராமச்சே[illegible]ர்களுக்கு ஏற்பட்டிருந்த மூன்று ரூபாய் சம்பளத்தைக்காட்டிலும் இவர்களுக்கு இப்போது புதியஏற்பாட்[illegible]படி நான்கு ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

கிராமபரிபாலன ஏற்பாடு சரியாய் நடந்துவரவேண்டுமென்பது நமது திருத்தருப்பூண்டி தாலூகா தா[illegible]ல்தார் ம-ா-ஸ்ரீ V. S. சாம்பசிவய்யர் B. A. அவர்கள் [illegible]மலான அபிப்பிராயம்.

வெட்டி தலையாரிகள், கிராம உத்தியோகஸ்தர்கள் முன்பாகப் பிரதி தினம் காலை 6-மணிக்கு ஆஜராகி அ[illegible]ர்கள் உத்த

ரவுப்படி வேலைசெய்துவரவேண்டுமென்றும் அதின் விபரத்துக்கு (ஆஜர் பதிவு புஸ்தகம்) அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தர் வைத்துப் பதிந்துவரவேண்டுமென்றும், வேலைசெய்யாதநாட்களின் சம்பளத்தைப்பிடிப்பதற்காக அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தரைச் சம்பளபில்லுடன் அடுத்த மாதத் துவக்கத்தில் ரிவினியூஇனிஸ்பெக்டர் அவர்களிடம் அனுப்பவேண்டுமென்றும் உத்தரவுசெய்திருப்பதோடு வில்லேஜ் தபால் சிஸ்டம் என்று ஒரு ஏற்பாடு செய்து தினமானம் தாலூகாவிலிருந்துகிராமங்களுக்கும், கிராமங்களிலிருந்து தாலூகாவுக்கும் தபால் போக்குவரத்து நடத்துகொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். இது மிகவும் சவுகரியமானது. இதைப்போலவே இதரதாலூகா தாசில்தாரவர்களும் இவ்வேற்பாட்டை அனுஷ்டானத்துக்குக்கொண்டுவரும் பக்ஷத்தில் கவர்ன்மெண்டாருக்கு விசேஷலாபமும் ஆபிஸ் நடவடிக்கைகளுக்கு மிகவும் சவுகரியமாகவுமிருக்கும். வில்லேஜ் தபால் ஸிஸ்டத்தைப்பற்றிய விபரம் பின்னால் விவரிக்கப்படும்.

கிராமபரிபாலனம் விர்த்தி.

இராஜ்ஜிய பரிபாலனம் ஒழுங்காய் நடத்தப்படவேண்டிய விஷயத்தில் நடவடிக்கைகளைச்சுளுவாய் முடிப்பதற்கேற்றதாய் நம் சென்னை இராஜதானிப் பிரதேசம் டிஸ்திரிக்டுகளாகவும், தாலூகாக்களாகவும்; கிராமங்களாகவும் வகுக்கப்பட்டுஅவ்வவ்விடத்திலும் ஒவ்வொரு உத்தியோகசாலை (கச்சேரி) ஏற்பட்டு அங்கங்கேவேண்டிய உத்தியோகஸ்தர்களை நேமித்து அவரவர்கள் செய்யவேண்டிய கடமைகளுக்கு விதிகள் ஏற்படுத்தப்பட்டு அவர்களால் ராச்சியபரிபாலன வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒரு விருக்ஷம் ஜீவித்திருப்பதற்கு வேரானது எப்படி அவசியமோ அப்படியே ராச்சியபரிபாலனத்திற்குக் கிராமக் கச்

சேரி ஏற்பாடானது முக்கியமானதென்பதை நாம் ஜாஸ்தியாய்ச் சொல்லவேண்டியதில்லை. இது சங்கதி நம் இராஜாங்கத்தாருக்கு நன்றாய்த்தெரிந்தே அதற்காகச் சுமார் எண்பது வருஷங்களுக்கு முன்னமே முதல் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுச் சில அம்சங்களில் சட்டம் திருத்தப்பட்டுமிருக்கிறது. இன்னும் கிராமபரிபாலன ஏற்பாட்டில் சட்டம் சீர்திருத்தப்படவேண்டியதாயும் கிராமபரிபாலனம் திருத்தமாய் நடத்தப்படவேண்டிய விஷயத்தில் இன்னும் சிலவிதிகள் ஏற்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவைகளுக்குப் போதுமான முகாந்திரத்தோடு மற்றொருமுறை விரிவாய் எழுதப்படும்.

ஓர் விண்ணப்பம்.

இப்பத்திரிகையானது சென்னைராஜதானியின் எல்லா கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் மிக அவசியமானது. இப்பத்திரிகையை ஒவ்வொரு கிராமஉத்தியோகஸ்தர்களும் வாங்கி வாசித்துப்பார்த்து அதிலுள்ள சங்கதிகளைத் தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டியதுந்தவிர தங்களுடைய அறிவுக்கெட்டியவிஷயங்களைத் தாங்களும் அடிக்கடி பத்திரிகையில் வெளியிடுவதற்காகப் பத்திராதிபருக்கு எழுதியனுப்பவேண்டும்.

சில இடங்களில் கர்ணங்கள் முன்சீப்புகளையும், முன்சீப்புகள் கர்ணங்களையும் வெறுக்கிறார்கள். அச்செய்கையானது அவர்கள் தங்களுக்குத்தாங்களே செய்துகொள்ளும் துன்பமேதவிர வேறில்லை.

ஒவ்வொரு மேலான அதிகாரிகளும் தங்கள் கீழ் அதிகாரிகள் அதி கௌரவமாயும் ஒழுங்காயும் அவர்கள் உத்தியோக கடமையை நிறைவேற்றுவதில் சந்தோஷம் அடைவார்கள். ஏனென்றால் கீழ் அதிகாரிகள் செய்யும் வேலையின் பலனானது கௌரவமுள்ள மேலதிகாரிகளின் கௌரவமாகவேயிருக்கின்றது.

இராஜாங்க வருமானத்தில் முக்கியமானதும் நிலைபெற்றதுமாகிய வருமானம (லாண்டுரிவினியூ) நிலவரி எவ்விதமான வருமானமானது அதிகப்படுவதற்கு யார் முக்கிய அவயவங்களோ அவர்களுடைய நிலைமை எவ்வளவு நல்ல ஸ்திதியிலிருக்கிறதோ அதற்கேற்றதாகவே அவ்வருமானமும் விருத்தியடையும் அப்படியிருக்கச் சென்னையிராஜதானியின் லாண்டுரிவினியூவை சேகரப்படுத்தும் வேலைகளில் முக்கியமானதும் மூலாதாரமானதுமான பொறுப்புகள் கிராமக கரணங்களைப் பொறுத்ததாயிருக்கின்றன. அவர்கள் எந்தக்காலத்திலும் அந்தந்தக்காலத்துக்குத் தகுந்தபடி கூடியவரையில் தங்கள் வேலைகளைப் போதுமானபடி முடிக்கச் சக்தியுள்ளவர்களாகவேயிருந்து இருப்பார்களென்று சொல்வதற்குப்போதுமான அத்தாக்ஷிகளிருக்கிறது. சக்தியுள்ளவர்களென்பது அவர்கள் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அறிவு[illegible]றிருப்பதுதான். அவர்களுடைய வேலையானது கவர்ன்மெண்டாருக்கும் பிரஜைகளுக்கும் பொதுவாய் அப்போதைக்கப்போது ஏற்படுகிற விதிகளின்படி நிலவருமானத்தைப்பற்றிய எல்லாக்கணக்குகளையும் தயார் செய்யவேண்டியதாயிருக்கிறது. கரணம் என்னும் உத்தியோகத்தை வகிக்கிறவர்கள் தங்களுடைய அ[illegible]ர சேவையை நடத்திவரும் திறமையின் பேரில் தங்கள் கிராமங்களில் மதிக்கப்பட்டு விளங்குவார்கள். கிராமஉத்தியோகஸ்தர்களை வாரவஸ்தர்களாகச் செய்வதில் கவர்ன்மெண்டார் தங்களுடைய மேலான அபிப்பிராயத்தைக்குறிப்பிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அப்படியிருக்க இப்போது நடவடிக்கையில் அதற்கு ஒவ்வாதவிதமாய் சில நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கிறது. அவைகளைச்சமயம் நேரும்போது திருஷ்டாந்தமாய்ப் பேசப்படும். புது ஏற்பாட்டில் சம்பளம் ஜாஸ்தியைப்பற்றி கர்ணம முன்சீப்புகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஸ்கேலானது முக்கியமாய்க் கர்டாரம்பங்களிலும் சிலபாகம் நீராரம்பங்களிலும் முதலாவதுகிளாஸ் ஏற்பட்டிருப்பதானது அவர்களுக்குப்போதுமான நியாயம் கிடைக்கத்தவறினதாக இருக்கிறது.

சம்பளமேற்பாடானது வருமானத்தை உத்தேசித்து ஏற்பட்டிருப்பது மாத்திரம் போதுமானதென்று சொல்லியாயிற்றில்லை. வேலையின் சிரமத்தையோசித்துச்சம்பளம் ஏற்படுவது நியாயமேயல்லாமல் வருமானத்தை மாத்திரம் உத்தேசித்துச் சம்பளம் ஏற்படுவது நியாயமுள்ளதென்றுசொல்ல இடமில்லை. சம்பளமானது வேலையின் சிரமத்தை உத்தேசித்துக்கொடுபடவேண்டியது நியாயமென்று சொல்வதை மறுப்பதற்கு யாதொரு நியாயமுமில்லை. கிராமங்களின் வருமானமானது நிலவளத்தையும் சீவனத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. வேலையின் சிரமமோ விஸ்தீரணத்தையும் பெருவழிகளின் சங்கியைகளையும் சர்வேயர் லெட்டர்களையும் ஏனுவிதசாருபடி இனங்களையும் பொறுத்ததாயிருக்கிறது. பொதுவாய்க் காடாரம்பங்களிலேயே ஏனுவிதப்பயிர்வகை ஜாஸ்தியும் மாதந்தோறும் மாறுதலான சாருபடியும், ஏராளமாய் நடந்துவருகின்றன. அப்படியிருக்க புதிய சம்பளஏற்பாட்டில் எந்த கிராமம் விஸ்தீரணம் ஜாஸ்தியோ எந்தக்கிராமம் பட்டாதாரர்கள் ஜாஸ்தியோ எந்தக்கிராமம் மாதந்தோறும் ஜாஸ்தியாய் சாருபடியாகிக்கொண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட அபாரவேலையுள்ள காடாரம்பக்கிராமங்களின் கர்ணம் முன்சிப்களுக்கு முதலாவது இலாஸ் சம்பளம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தைப் பற்றிப் பின்னும் நம்முடைய அபிப்பிராயப்படிக்குள்ள குறைப்பாட்டைச் சேகரித்துப் பிற்பாடு பத்திரிகைகளில் விரிவாய் வெளிப்படுவதற்காக அவ்விஷயத்தைச் சுருக்கமாய் நிறுத்துகிறோம்.

கிரிமினல் நடவடிக்கையின் விவரிப்பு.

---

1. கிராம மாஜிஸ்திரேட்டுகளுக்கு ஒரு ரூபாய்க்குட்பட்ட சொற்பத் திருட்டுக் கேசுகளைப் பரிசீலனை செய்வதற்குச் சென்னபட்டணம் 1821-வருஷத்திய 4-வது ரெகுலேஷன் 6வது பிரிவினாலும்; திட்டுதல், சொற்பச் சச்சரவு, சண்டை, தாக்குதல் முதலிய குற்றங்களைப் பரிசீலனை செய்வதற்கு 1816-வருஷத்திய 11-வது ரெகுலேஷன் 10-வது பிரிவினாலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. அவ்வித கேசுகளைக் கிராம மாஜிஸ்திரேட்டுகள் பிராது முதல் விசாரணை முடிவு வரையில் வாய்மொழியாகவே பரிசீலனை செய்து தீர்மானஞ்செய்யவும் முடிவில் விசாரணையின் முடிவு சுருக்கத்தை A பாராப்படிக்குள்ள ரிஜிஸ்தரில் எழுதிப் பூர்த்திசெய்யலாமென்றும் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஆனால் எல்லா நடவடிக்கைகளையும் வாய்மொழியாகவே நடத்தி முடிவில்மாத்திரம் A பார ரிஜிஸ்தரைப் பூர்த்தி செய்வதென்றால் நாகரீகம் பொருந்திய இக்காலத்திற்குப் பெரும்பாலும் பொருந்தாதென்று எண்ண ஏதுவிருக்கிறது. இதை உத்தேசித்தே தஞ்சாவூர் டிஸ்ட்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டு துரையவர்களால் கிராம மாஜிஸ்திரேட்டுகள் தங்களால் வாய்மொழியாகப் பரிசீலனை செய்யப்படுகிற சொற்பக் கேசுகளின் விஷயத்தில் விசாரணையின் விருத்தாந்தத்திற்கு கோட்டு வைக்கிருக்க வேணுமென்று ஒரு உத்திரவு கொஞ்சகாலத்திற்குமுன் பிறப்பித்து இருந்ததைபபார்த்த ஞாபகமிருக்கிறது. உத்திரவை ஆராய்ந்து எடுத்துப் பிறகு எழுதப்படும். இதனால் நாம் அபிப்பிராயப்படுகிறபடி விசாரணையின் விர்த்தாந்தம் சுருக்கமாய் எழுத்து மூலமாகயிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

4. குற்றவாளிகளைத் தண்டனை செய்யும் விஷயத்தில் குற்றவாளிகளின் செய்கை குற்றமுள்ளதென்பதை நியாயாதிபதி மாத்திரம் தெரிந்துகொண்டு குற்றவாளிக்குச் சிட்சை விதிப்பது போதுமானதல்ல. தெண்டனையானது குற்றவாளி தன் குற்றத்தை உணர்ந்து இனி நல்வழிப்படும்பொருட்டும் இதர ஜனங்கள் குற்றத்தையும் அதனால் வரும்தண்டனையையும் அறிந்து குற்றஞ்செய்யாதிருக்கும்பொருட்டுமே நியாயவிசாரணையும் தெண்டனையும் ஏற்பட்டிருக்கிறது.

5. ஆகையால் கிராம மேஜிஸ்திரேட்டுகள் தாங்கள் கேசுகள் பரிசீலனை செய்வதில் 4-வது பாராவில்கண்ட விஷயங்கள் உபயோகமாகும்படி நடவடிக்கைகளைச் சாத்தியமானமட்டில் கொஞ்சம் விரிவாய் நடத்துவது உசிதமாயிருக்கிறது.

6. அதுவிஷயத்தில் அடியிற்கண்ட விதிகளின்படி கேசுகளைப் பரிசீலனை செய்வது நலமாயிருக்கும்.

பிராது கொடுக்கும் விபரம்.

பிராதைக் கக்ஷிக்காரராவது தெளிவாய்க் கிராமத்தில் வழங்குகிற பாஷையில் எழுதி அதில் வாதி கையெழுத்திட்டு கிராம மாஜிஸ்திரேட்டுக்கு நேரில் கொடுபடவேண்டும்.

சில சமயங்களில் எழுத்துமூலமாய்ப் பிராது கொடுக்கச் சாத்தியப்படாதவிஷயத்தில் பிராதை கிராம மாஜிஸ்திரேட்டு தன்முன்பாகச் சொல்லச்சொல்லி வாய்மொழியாகக்கேட்டு எழுதிக்கொண்டு அதில் வாதியைக் கையெழுத்து அல்லது கைகாட்டுப் போடும்படிச் செய்யலாம்.

பிராதில் எழுதவேண்டிய விஷயங்களும் மேல் நடவடிக்கைகளும்.

(a) வாதி, எதிரி, வாதிபக்கம் சாக்ஷி இவர்களுடைய பெயர், தகப்பன்பெயர், தொழில் முதலிய விபரமும் வாசஸ்தலமும்.

(b) குற்றம் நடந்த இடமும் குற்றத்தின் சுருக்கமான ஸ்டேட்டுமெண்டும்.

(c) குற்றம் நடந்த தேதியும் மணியும்.

7. அப்படிப்பட்ட பிராதை பிராது செய்யப்படுவதன் மேல் அதைப் பிடிக்கும் கிராம மாஜிஸ்திரேட்டானவர் பிராதுக்காரனைப் பிரமாணத்தின்பேரில் உடனே விசாரணை செய்ய வேண்டும். அந்த விசாரணையின் சாராம்சத்தை எழுதிக்கொண்டு அதில் பிராதுக்காரர் கையெழுத்து செய்யவேண்டியது மல்லாமல் அதினடியிலும் என்முன்பாக எழுத்துப்பூர்த்தி செய்யப்பட்டதென்று சர்டிபிகேட் எழுதித் தான் கையெழுத்து செய்யவும் வேண்டியது.

8. பிராது எழுத்துமூலமாய்ச் செய்யப்பட்டாலும் வாய்மொழியாய்ச் சொல்லப்பட்டதின்பேரில் எழுதிவாங்கப்பட்டாலும் அந்தப் பிராதானது தன்னுடைய பரிசீலனைக்குட்பட்ட

தாயிருந்தாலொழிய அந்தக் கிராம மாஜிஸ்திரேட்டானவர் பிராதுக்காரர்களைப் பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்ய வேண்டியிருப்பதாக இதனால் நினைக்கக்கூடாது.

9. பிராது எழுத்துமூலமாய்ச்செய்யப்பட்டிருந்து அந்தக் கேசானது தான் விசாரிக்க அதிகாரமில்லாததாயிருக்கும்பக்ஷத்தில் அவர் அந்தப்பிராதைத் தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டாரிடத்தில் கொடுத்துக்கொள்ளப்படுவதற்காக வாபஸ் கொடுக்கப்பட்டதென்று அதின்மேல் இண்டார்ஸ் எழுதித் தான் கையெழுத்துசெய்து பிராதை பிராதுக்காரரிடம் கொடுத்துவிட வேணடும்.

(a) அந்தப்பிராது வாய்மொழியாகச்சொல்லிக்கொள்ளப்பட்டிருந்தால்பிராதுக்காரனைத்தகுந்த அதிகாரமுடைய கோர்ட்டுக்குப் போகும்படி வாய்மொழியாகவே உத்திரவு செய்யலாம்.

10. தன்னுடைய பரிசீலனைக்குள்பட்ட பிராதானது எந்த கிராமமாஜிஸ்திரேட்டாரிடம் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதைப் பிராதுக்காரனிடம் பிரமாணத்தின்பேரில் உறுதிமொழி விசாரணை செய்ததின்பிறகு அவைகளை ஆலோசனை செய்து நடவடிக்கைநடத்தப் போதுமான முகாந்திரம் இல்லையென்று தனக்குத் தோற்றினால் அந்தப்பிராதை விசாரணை செய்யாமல் தள்ளிவிடலாம்; அப்படித் தள்ளிவிடும் சமயங்களில் அப்படிச் செய்வத[illegible]குத் தனக்குத்தோன்றுகிற நியாயங்களைச் சுருக்கமாய் எழுதி ரிகார்டு செய்யவேண்டும்.

11. யாதொரு [illegible]க்குறித்த பிராதைப் பிடிக்கிற கிராமமாஜிஸ்திரேட்[illegible] நடவடிக்கைநடத்தப் போதுமான முகாந்திரமிருக்கிற[illegible]ன்று அபிப்பிராயப்பட்டால் குற்றம் சாட்டப்பட்டவனைத் தன் முன்பாக வரவழைக்கவும் மற்றும் நடவடிக்கைகளை நடத்தவும் ஆரம்பிக்கவேண்டியது.

12. குற்றம் சாட்டப்பட்டவன் குறித்த தினத்தில் தன் கோர்ட்டில் ஆஜராகவேண்டுமென்று கிராம மாஜிஸ்திரேட்டு இ[illegible]மன் பிறப்பிக்கவேண்டியது.

13. சம்மன் வாய்மொழியாகவாவது எழுத்து மூலமாகவாவது இருக்கலாம். எழுத்துமூலமாய் சம்மன் பிறப்பிப்பதே பலவிஷயத்திலும் கண்டிப்பாயிருக்குமாதலால் எழுத்து மூலமான சம்மன் பிறப்பிப்பதையே பெரும்பாலும் வழக்கமாய்க்கொள்வது நலம்.

14. சம்மனில் கோர்ட்டின்பெயரும் குற்றம் சாட்டப்பட்டவனுடைய பெயர், சாட்டப்பட்ட குற்றத்தின் தன்மை ஆஜராகவேண்டிய இடம், காலம் இவைகளைக் கண்டு எழுதுவதோடு ஆஜரானபின்பு கோர்ட்டார் உத்திரவன்னியில் அவ்விடத்தைவிட்டுப் போகக்கூடாதென்றும் இரட்டைப்பிரதியாக எழுதி அதில் கிராமமாஜிஸ்திரேட்டு கையெழுத்தும் கோர்ட்டு முத்திரையும் போடவேண்டியது.

15. அப்படிப்பட்ட சம்மனை கிராமச்சேவகர்கள் (வில்லேஜ் போலீஸ்) அதாவது தலையாரிகள் மூலமாகச் சேர்ப்பிக்க வேண்டியது.

16. சம்மன் பிரதிகளிலொன்றை அவனுக்கு நேரில் ஒப்பிவித்தாவது வாங்கிக்கொள்ளச்சொல்லிக் காட்டியாவது நேரில் கொடுக்கவேண்டும்.

17. அப்படி ஒப்பிவிக்கப்பட்ட சம்மனுக்கு அவன் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக மற்றொரு பிரதியின் பின் பக்கத்தில் சம்மன்பிரதியொன்றைப்பெற்றுக்கொண்டதாக இண்டார்சு எழுதி தேதிபோட்டு அவனிடம்கையெழுத்து வாங்கவேண்டியது. அவன் கையெழுத்திட்டதற்கு ருசுவாக அதில் இரண்டு சாக்ஷிகள் வாங்கலாம். அவன் கைநாட்டுசெய்பவனாயிருந்தால் அவசியம் இரண்டு சாட்சிகள் வாங்கவேண்டியது.

18. யாருக்குச்சம்மன் பிறப்பிவிக்கப்படுகிறதோ அவனை கிரமமான ஜாக்கிரதையோடு தேடிப்பார்த்தும் அகப்படாவிட்டால் அவனுடைய குடும்பத்தைச்சேர்ந்த வயதுவந்த ஒரு ஆண்பிள்ளை இடத்திலாவது அவனோடுவாசம் செய்துகொண்டிருக்கிற அவனுடைய வேலைக்காரனிடத்திலாவது அவனுக்

காக சம்மன்பிரதிகளிலொன்றைச் சேர்ப்பிக்கலாம். சம்மன் பிரதி யாரிடத்தில் சேர்ப்பிவிக்கப்படுகிறதோ அதைப் பெற்றுக்கொண்டதற்கு ருசுவாக மற்றொரு பிரதியில் தேதிபோட்டு அவன் கையெழுத்து செய்யவேண்டியது.

19. அப்படிக் கிரமமாய் ஜாக்கிரதைப்பட்டும் மேலே சொல்லியிருக்கிறபடி சேர்ப்பிக்க முடியாவிட்டால் சம்மனைக்கொண்டுபோகிற உத்தியோகஸ்தன் எவன் பேரில் சம்மன் செய்யப்படுகிறதோ அவன் வழக்கமாய்க் குடியிருக்கிற வீட்டிலாவது குடியிலத்திலாவது நன்றாய்த்தெரியும்படியான இடத்தில் சம்மன் பிரதிகளி லொன்றை ஒட்டி அதன் விபரத்தை மற்றொரு பிரதியின் பின்பக்கத்திலெழுதி அதற்குச்சாக்ஷிவாங்கவேண்டியது.

20. சம்மனானது சேர்ப்பிவிக்கப்பட்ட விபரத்துக்கு இண்டார்சு செய்திருப்பதாகப் பொருள்படுகிற ஒவ்வொரு சம்மன் பிரதியும் அவைகளில் கண்டிருக்கும் சங்கதிகள் விரோதமாக ருசுவாகாவிட்டால் அல்லது ருசுவாகிறவரையில் அது சரியாக இருப்பதாகவே எண்ணப்பட்டு சாக்ஷியத்தில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகும்.

21. அப்படிச்சேர்ப்பிக்கப்பட்ட சம்மன் பிரதியைச் சேர்ப்பிவித்த உத்தியோகஸ்தன் கோர்ட்டுக்கு வாபசு கொடுத்துவிடவேண்டியது.

22. அப்படித் திருப்பிக்கொடுக்கப்பட்ட சம்மனை அங்கீகரிக்கிற கோர்ட்டார் [illegible] பெற்றுக்கொண்ட தேதிபோட்டு இனிஷியல்செய்து ரிகார்ட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

கேசுகளைப் பரிசீலனை செய்வதைக் குறித்து.

கேசுகளைப்பரிசீலனைசெய்வதில் கிராம மாஜிஸ்திரேட்டுகள் அடியிற்கண்ட நடவடிக்கைகளை அநுசரிக்கவேண்டியது.

23. குற்றம் சாட்டப்பட்டவன் கோர்ட்டுக்கு முன் ஆஜராகிலும், கொண்டுவரப்பட்டாலும் அவன்பேரில் கொண்டுவ

சப்பட்டிருக்கும் பிராதின் விவரங்களை அவனுக்குத்தெரிவித்து அவனைக் குற்றவாளி என்று தீர்மானிக்காதிருப்பதற்கு ஏதாவது நியாயமிருக்கிறதாவென்று கோர்ட்டார் அவனைக் கேட்கவேண்டும்.

24. அப்படிக் கேட்ட கேள்விகளையும் அதற்கு அவன் சொல்லும் ஜவாப்புகளையும் அவன் சொல்லுகிறமாதிரியாகவே கோர்ட்டார் எழுதிக்கொள்ளவேண்டும்.

25. ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யக்கூடாது.

26. குற்றஞ்சாட்டப்பட்டவன் தன்மேல் சாட்டப்பட்ட குற்றத்தைத் தான் செய்ததாக ஒப்புக்கொண்டால் அவன் ஒப்புக்கொள்வதைக் கூடியமட்டில் அவன் சொன்ன மாதிரியாகவே எழுதிக்கொள்ளவேண்டும். குற்றவாளி என்று அவனைத் தீர்மானிக்காதிருப்பதற்குப் போதுமான காரணத்தை அவன் தெரிவிக்காவிட்டால் கோர்ட்டார் அவனை அப்படியே குற்றவாளி என்று தீர்மானிக்கவேண்டும்.

27. குற்றஞ்சாட்டப்பட்டவன் குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்ளாவிட்டால் கோர்ட்டார் பிராதுக்காரன் எவனாவது இருந்தால் அவனை அவன் சொல்லுகிறதைக் கேட்கவும், பிராதுக்கு ஆதாரமாய்க் கொண்டுவரப்படுகிற எல்லா சாட்சியத்தையும் வாங்கத் தொடங்கவேண்டியதுந்தவிர குற்றஞ்சாட்டப்பட்டவன் சொல்லுகிறதைக் கேட்கவும், அவன் பக்ஷத்தில் அவன் கொண்டுவருகிற சகல சாட்சியத்தையும் வாங்கத்தொடங்கவும்வேண்டும்.

28. பிராதுக்காரனாவது குற்றஞ்சாட்டப்பட்டவனாவது மனுச்செய்துகொள்வதின்மேல் தனக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி கோர்ட்டார் யாதொரு சாட்சி ஆஜராகும்படிக்கு நிர்ப்பந்திப்பதற்கு சம்மன் பிறப்பிக்கலாம்.

29 கோர்ட்டார் மேற்சொல்லியபடிக்குள்ள சாக்ஷியத்தை அல்லாமல் வேறு யாரை விசாரித்தால் உண்மை வெளிப்படுமென்று நினைக்கிறாரோ அந்த நபரையும் சம்மன்செய்து வரவழைக்கலாம்.

30. கோர்ட்டார் சாட்சிகளைப் பிரமாணத்தின்பேரிலாவது பிரமாணபூர்வமான உறுதிமொழியின்பேரிலாவது விசாரிணை செய்யவேண்டியது. சாட்சியினுடைய வாக்குமூலத்தைக் கோர்ட்டார் எழுதவேண்டுமென்கிற அவசியமில்லை. ஆனால் எழுத்துமூலமாய் வைத்துக்கொள்வது நலம்.

31. சாட்சிகளை விசாரணைசெய்யும்பொழுது உபய கட்சிக்காரர்களின் முன்னிலையில் நடத்தப்படவேண்டியது.

32. அப்படி விசாரணை செய்வதில் கட்சிக்காரர்கள் இஷ்டப்பட்ட சட்ட சம்மதமான குறுக்குக் கேழ்விகளைச் சாட்சிகளுக்குப்போடும்படிசெய்து அதற்கு ஜவாப்புகளைச் சாக்ஷிகளைச் சொல்லும்படி செய்யவேண்டியது.

33, உபய கட்சிக்காரர்கள் சொல்லிக்கொள்வதையும் உபய கட்சிக்காரர்களின் சாட்சியத்தையும் யோசித்து நியாயமாகவும் நடுவுநிலைமையாகவும் மனச்சாட்சிக்குப் பொருத்தமாகவும் காணுகிறபடி குற்றஞ்சாட்டப்பட்டவனைக் குற்றவாளி அல்லவென்று தீர்மானித்தால் குற்றவாளி அல்லவென்று விடுதலைசெய்கிற உத்திரவை அவர் எழுதிவைக்கவேண்டும்,

34. குற்றஞ்சாட்டப்பட்டவனை அவர்குற்றவாளியென்று தீர்மானித்தால் அவர் அவனுக்குச் சட்டப்படி தெண்டனை விதிக்கவேண்டும்.

(மற்றவை பின்னால்வரும்)

கிராமாந்தரங்களில்சீர்திருத்தவேண்டியவிஷயங்கள்

I-வைசூரி.

நமது கவர்ன்மெண்டாரவர்கள் குடிகளுக்குச்செய்துவரும் பற்பல காரியங்களில் தொற்றுந்தன்மையுள்ள கொள்ளைநோய் முதலியவைகளைத் தடுக்கவும், பரவாமலிருக்கவும், பரவினால் மரணபயத்தை விளைவிக்காமல் சமானமாய்ப் போகவும்

வேண்டிய விஷயமாய்ச் செய்துவருங் கருமங்களை மகாமுக்கிய மாய்க் குறிகொண்டு நடத்திவருகிறார்கள். இவை குடிகளுடைய உயிர்களை அபாயத்தினின்று நீக்கி ரக்ஷிக்குங் கருமங்களாகையால் அப்படிக் கவனித்து வரப்படுகின்றன. அவ்வாறு வந்தும் கவர்ண்மெண்டாரவர்கள் கருத்துப்படி பிரஸ்தாபகருமஞ் சிலவிடங்களில் வழுவுதலடைந்து போகின்றனவாகத் தெரியவருகிறது. அப்படிப் போகாவண்ணம் அடியிற்கண்ட சில ஏற்பாடுகளைக் கவர்ண்மெண்டார் ஏற்படுத்துவார்களேயானால் வெகு உசிதமாயிருக்கும்.

அம்மையென்னும் கொடியவியாதி உலகத்தில் வேரோடு அற்றுப்போக வேண்டுமென்று கருதிக் கவர்ண்மெண்டில் அளவற்ற திரவியத்தைச் செலவுசெய்து வாக்ஸிநேஷன் டிபார்ட்மெண்டு என்னும் அம்மை குத்தும் இலாகாவை ஏற்படுத்தி அம்மை குத்தப்பட்டு வருவதில் பட்டணங்களில் கட்டாயம் அம்மை வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், நிராகரித்தால் கிரிமினல் தரப்பில் சிக்ஷித்தல் என்னும் ஏற்பாடிருப்பதினால் அவ்வேலை அநேகமாய்ப் பூரணமடைந்து நன்மை மேலோங்குகின்றது. கிராமாந்தரங்களிலேயோவென்றால் தாசில்தார்கள் மேற்படி இலாகாதார்களுக்குக் கிராம உத்தியோகஸ்தர்களை வேண்டிய உதவிசெய்து கூடப்போய் அம்மைரிஜிஸ்தரில்கண்ட பேர்களில் ஒருபேர்கூடத் தவறாமல் அம்மை வைத்துப்போகவேண்டும். இல்லாவிட்டால் கனகடுமையாய் சிக்ஷிப்போமென்று உத்தரவனுப்புவது வழக்கம். அதற்குப் பயந்து கிராம உத்தியோகஸ்தர்கள் வாக்ஸிநேட்டருடன் கூடப்போய் அம்மை வைத்துக்கொள்வதினாலுண்டாகும் நன்மைகளைக் குடிகளுக்குப் போதித்தும் பிள்ளைகளுக்கு அம்மைகுத்தத் தொடங்குகையில் சிலர் "என் பிள்ளையைச்சாகாமல் நீங்கள் பிடித்துக்கொள்ளவேண்டாம், இது குத்தினால் சாகிறதில்லையோ? நீங்கள் வந்திருகிறதற்கு எந்த இழவாவது கொடுக்க வேண்டுமெல்லவா? போங்களையா போங்கள்" என்று பிள்ளைகளை இழுத்துக்கொண்டுபோய் விடுதல், சிலர் பிள்ளைகளை ஒளித்துவைத்தல் முதலான

பலவிததடையும் சங்கடமும் தருவதால் அவ்வேலை சரிவர முற்றுப்பெறவில்லையாகையால் பட்டணங்களிற்போல நாட்டுப்புறங்களிலும் எல்லோருங் கட்டாயமாய் அம்மைவைத்துக் கொள்ளவேண்டுமென்றும் இல்லாவிட்டால் தண்டிக்கப்படவேண்டுமென்றும் ஒரு புதிய ஏற்பாடு செய்தால் பெருத்த நன்மையைத் தரத்தக்கதாயிருக்கும்.

II-சுகாதாரம்.

சாதாரணகாலத்திலும் பேதி முதலிய தொற்று நோய்கள் பிடிக்கப்பட்டு வருங்காலத்திலும் பட்டணங்கள் நீங்க கிராமாந்தரங்களில் ஜீவரக்ஷார்த்தமான நன்மையை உத்தேசித்தும் மேலதிகாரிகளின் உத்தரவுகளுக்கும் பயந்தும் கிராம உத்தியோகஸ்தர்கள் என்ன சிரத்தையெடுத்துக்கொண்டாலும் சானிடேஷன் விஷயமாய்ச் சரிவர நடைபெறுவதில்லை. ஏனெனில் கிராமத்திலுள்ளார் வரம்புதப்பி இவ்விஷயமாய்ச் செய்யும் தப்பிதங்களை நிவர்த்திக்கவேண்டுமெனில் கிராமமுன்சீப்புகள் மாஜிஸ்திரேட்டுகளுக்கு ரிப்போர்ட்டுசெய்து அவர்கள் சிக்ஷையடையும் விஷயமாய்ச் சாக்ஷிகள்தேடி, தாமெழுதிக்கொண்ட ரிப்போர்ட்டில் கண்ட கேஸ் முற்றுப்பெறவேண்டும். இல்லாவிடில் இதர அயலாரும் இன்னும் அலக்ஷியம் செய்வார்கள். எதிரியும் பரிகாசம்பண்ணித் தூஷிப்பானென்ற விஷயத்தையுமனங்கொண்டு சாக்ஷிகளுக்குப் படிச்செலவுமுதல் கிராமமுன்சீப்புகள்கொடுத்து அழைத்துக்கொண்டு தானும் படிச்செலவுசெய்துகொண்டு மாஜிஸ்திரேட்டுகள் ஒற்றிக்குறிக்கும்பலவாரங்களுக்குமபோய்த்தொந்தரவுப்படும். அநேகசமயங்களில் மாஜிஸ்திரேட்டுகளால் அவ்வச்சமயம் உண்டாகும் எண்ணத்துக்கேற்பக் கேஸ்கள் பயனடையாமற்போவது காரணமாய் கிராமமுன்சீப்புகள் சரியாய்த்தாங்கள் கவனிக்கவேண்டிய சுகாதாரவிஷயம் கவனித்தல் சனமடைந்தும்கவனித்தாலும் நிர்ப்பலனடைந்தும் போவதினால் கிராமாந்தரங்

களில் சுகாதாரமான விஷயங்கள் சரியாய் நடைபெறவில்லை. ஆனால் அந்தக்கிராமத்தலைவர்களுக்கே அவ்விஷயமாய்ச் செய்யப்படும் தவறுதலுடையவர்களுக்குக் கேவலம் ஒரு ரூபாயாவது அபராதமாத்திரம் விதிக்கத்தக்க கிரிமினல் அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்தால் மேற்சொல்லப்பட்ட ஒழுங்கீனம் முற்றும் நிவர்த்திக்கப்படுமென்பது திண்ணம். கிராமாதிகாரிகளுக்கு அவ்வித கிரிமினல் அதிகாரம் உண்டாகவேண்டுமென்றும் அநேகர்கள் பெருமைபெறவேண்டுமென்பதும் நமது கருத்தல்ல. ஜீவாதாரமாயிருக்கிற சானிட்டேஷன் விஷயம் ஒழுங்கீனத்தில் நின்று விலகி விர்த்தியடைந்து நன்கு நடைபெற்று வரவேண்டுமென்பதே நமது கருத்து. திருஷ்டாந்தமாய்க் கும்பகோணத்தில் மகாமக உற்சவம் நடக்குங்காலத்தில் கவர்ன்மெண்டார் ஏற்கனவே கிரிமினல் அதிகாரம் பெற்றிராத ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், கிளார்க்கு சப்ரிஜிஸ்டிரார்கள் முதலான பலருக்கும் நியூஸன்ஸ் விஷயமாகக்கிரிமினல் அதிகாரத்தை அவ்வுற்சவம் முடியும்வரையில் கொடுத்திருந்தார்கள். அத்தருணம் கவனிக்கப்பட்டு வரவேண்டிய சுகாதாரமானவிஷயம் தவறாது நடைபெறவன்றி வேறல்லவே.

திருத்தமான ஸ்டாண்டிங் ஆர்டர்.

(செ. 28)

அடியிற்கண்ட திட்டங்களை அனுசரித்து எல்லாக்காரியங்களுக்காகவும் சர்வே புலங்களை சப்டிவிஷன் செய்வதற்கு உத்திரவு கொடுக்கலாம்.

> 1893௵ டிசம்பர்-மீ 5உ புள்ள 504 செ. 1894௵ நவம்பர்-மீ 29உ புள்ள 524-செ. போர்டாருடைய நடவடிக்கை. (செட்டில்மெண்டு இலாகா.)

1. (a) பொதுவான காரியங்களுக்காக நிலங்களை எடுத்துக்கொள்ளுகிற விஷயங்களிலும், (b) கட்டங்களைப்பற்றிய ஆக்டின் நிபந்தனைகளின்படி அநுபோக நிலங்களை சப்டிவிஷன் செய்கிற விஷயங்களிலும், (c) சர்வே செய்யாத பிளாக்குகளின் பாகங்களையும் தீர்வை விதிக்கப்படாத காம்பு அல்லது புறம்போக்கு நிலங்களின் பாகங்களையும் பட்டாவின்மேல் ஒப்படைசெய்கிற விஷயங்களிலும் சப்டிவிஷன்செய்கிற பாகத்தி

ற்கு நிலையாய் எல்லைக்குறி ஏற்படுத்தவேண்டும். விற்பனை நிமித்தமாகவாவது டிரான்ஸ்பர் நிமித்தமாகவாவது ராஜிநாமா கொடுத்த நிமித்தமாகவாவது சப்டிவிஷன் செய்யவேண்டிய விஷயத்தில் நபர்களுக்கு விருப்பம் இருந்தாலும் சரி அல்லது டிவிஷன் ஆபீசர் அப்படிச்செய்யவேண்டுமென்று உத்திரவு கொடுத்தாலும் சரி, கற்களால் எல்லைக்குறி ஏற்படுத்தலாம்.

1886-௵ செப்டம்பர்௴ 7௳ யுள்ள 1989 நெ. போர்ட்டாருடைய நடவடிக்கைகள்.

2. சப்டிவிஷன் செய்யப்பட்ட பாகத்திற்குக்கிராமக்கணக்குகளில் பிரத்தியேகமாக எழுத்திட்டு நம்பர் போடவேண்டும்.

1886-௵ ஜனவரி௴ 5௳ யுள்ள 19 நெ. போர்ட்டாருடைய நடவடிக்கை.

3. அது யாதொரு தனி பிளாக்காக இருக்கவேண்டுமே அல்லாமல் துண்டு துண்டாக இருக்கக்கூடாது. வெளியிலிருந்து சுலுவாகப் பிரவேசிக்கத் தக்கதாக இருக்கவுமவேண்டும்.

1886-௵ ஜனவரி௴ 5௳ யுள்ள 19 நெ. 1886-௵ டிசம்பர்௴ 18௳ யுள்ள 2731 நெ. போர்ட்டாருடைய நடவடிக்கைகள்.

4. இராஜிநாமா கொடுக்கும் விஷயத்தில் சப்டிவிஷன் செய்வதனால் இராஜிநாமாக்கொடுக்கப்போகிற பாகம் வெள்ளங்களினாலாவது அல்லது ரயத்துடைய வசப்படாத இதர காரணங்களினலாவது அழிந்துபோனாலும் பயனற்றதாய்விட்டாலும், அன்றி மற்றபடி ராஜிநாமா விஷயத்திற்காகப் பிரிக்கப்பட்ட பாகமானது புஞ்சையானால் இரண்டு ஏக்ராவுக்கும் நஞ்சையானால் ஒரு ஏக்ராவுக்கும குறைந்திருக்கக்கூடாது.

1890-௵ ஜனவரி௴ 27௳ யுள்ள 54 நெ. போர்ட்டாருடைய நடவடிக்கை.

5. வஜாவுக்காக சப்டிவிஷன் செய்வதாகயிருந்தால் சர்வே புலமானது ஒன்றாகத்தொகுக்கப்பட்ட இரண்டு அல்லது அதிகமான ரிவினியூ புலங்கள் அடங்கியிருந்தாலும் சரி, இராவிட்டாலும் சரி புதுப்புலங்களானவை எவ்விதத்திலும் விஸ்தீரணத்தில் ஒரு ஏக்ராவுக்குக் குறைந்திருக்கக்கூடாது.

1. சப்டிவிஷன் செய்யப்பட்ட நிலம் எந்தத்தாலூகாவைச்சேர்ந்த கிராமத்திலிருக்கிறதோ அந்தத்தாலூகாவின் ஜமாபந்தியை நடத்துகிற உத்தியோகஸ்தராலாவது டிவிஷனல் ஆபீஸராலாவது காயம் செய்யப்படுகிறவரையில் சப்டிவிஷன் செய்தது எதுவும் செலாவணியாகமாட்டாது. மேற்சொன்ன இட்டங்கள் அநுசரிக்கப்படாத விஷயங்களில் சப்டிவிஷன் செய்தவைகளை காயஞ்செய்வதில்லையென்று டிவிஷனல் ஆபீசரும் ஜமாபந்தி ஆபீசரும் தங்களுக்கு இஷ்டமானால் மறுக்கலாம். அப்படிக்காயம் செய்தபிறகு சப்டிவிஷன் செய்யப்பட்ட பாகமானது எல்லா அம்சங்களிலும் தனிப்புலமாகவே பாவிக்கப்படும். மேற்சொன்ன விதிகளின்படி சப்டிவிஷன் செய்யமுடியாத சந்தர்ப்பங்களில் ஓர் புலத்தின் ஒருபாகம் யாதொரு ரயத்தின் அநுபோகத்திலிருக்குமிடில் அந்தப்புலம் முழுவதற்கும் நிஷ்கரிஷை செய்யப்பட்டுள்ள தீர்வையை அநுபோகத்திலுள்ள பாகத்திற்கு விதிப்பது கலெக்டருடைய இஷ்டம்.

1886-ஹு ஜனவரிமீ 5வ யுள்ள 19 செ. 1886-ஹு பிப்ரவரிமீ 25வ யுள்ள 500 செ, 1886ஹு செப்டம்பர்மீ 7வ யுள்ள 1989 செ. போர்ட்டாருடைய நடவடிக்கைகள்.

2. சர்வே செய்யப்பட்டாவது செட்டில்மெண்டு செய்யப்பட்டாவது இருக்கிற ஜில்லாக்களில் காரணமானவர் அதற்கென்று தமக்குச்சப்ளை செய்யப்பட்டிருக்கும் புல அளவுப்புத்தகத்தில் சர்வே புலங்களின் எல்லா சப்டிவிஷன்களையும் எழுதிவைக்கவேண்டும். செட்டில்மெண்டு காலத்திலாவது அதன் பின்பாவது தகுந்த அதிகாரத்தைக்கொண்டு சப்டிவிஷன்களைச் செய்து செட்டில்மெண்டு ரிஜிஸ்தரில் எழுத்துக்களால் ஆயினும் சப்நம்பர்களால் ஆயினும் காட்டியிருக்கிற விஷயத்தில் சப்டிவிஷனுக்கு நக்ஷா (ஷேப்பு அதாவது உருவத்தைக்காட்டும்படம்) தயார் செய்து அளவு ரிகார்டுகள் கிடைக்கக்கூடிய இடங்க

1876ஹு மேமீ 24வ யுள்ள 1368 செ. போர்ட்டாருடைய நடவடிக்கை 1893-ஹு டிசம்பர்மீ 5வ யுள்ள 504 செ. (செட்டில்மெண்டு) 1894-ஹு அக்டோபர்மீ 10வ யுள்ள 424 செ செட்டில்மெண்டுபோர்ட்டாருடைய நடவடிக்கைகள 1894-ஹு நவம்பர்மீ 29வ யுள்ள 524 செ. போர்ட்டாருடைய நடவடிக்கை.

வில் அளவுகளைப் புலஅளவு புஸ்தகத்தில் பெயர்த்து எழுதலாம். அந்த ரிகார்டுகள் கிடைக்காவிட்டால் கரணமானவர் சப்டிவிஷன்களை அளந்துபார்த்து அந்த அளவுகளைப் புல அளவு புஸ்தகத்தில் பதிந்துகொள்ளவேண்டும். டிவிஷனல் ஆபீசருடைய உத்தரவு வேண்டியிருக்கிற புதுசப்டிவிஷன்கள் விஷயத்தில் கரணமானவர் தம்முடைய புலஅளவுபுஸ்தகத்திலிருந்து சப்டிவிஷன் உருவத்தையும் அளவுகளையும் காட்டும் ஒரு சரியானநகல் தயார்செய்து அதுசரியானதென்பதற்கு அந்தப்பிர்காவின் ரிவினியூ இன்ஸ்பெக்டருடைய மேற்கையெழுத்தை அதில் வாங்கி அதைத் தாலூகா ஆபீசிற்கு அனுப்பவேண்டும். டிவிஷனல் ஆபீசருடைய உத்திரவைப்பெற்ற பிறகு அந்த நகலைக் கடைசியாக தாலூகா ஆபீசில் கிராமவாரியாகச்சேர்த்து மிகவும் ஜாக்கிரதையாகவைத்துக் காப்பாற்றவேண்டும். அவைகளுக்காகப் பிரத்தியேகமான ஒரு ரிஜிஸ்தர் வைக்கவேண்டும். சப்டிவிஷன் சம்பந்தமான எல்லாப்பழய ரிகார்டுகளையும் ஜாக்கிரதையாக வைத்துக்காப்பாற்றவேண்டும். தர்க்காஸ்துக்கொடுத்ததின் நிமித்தமாகவாவது ராஜினாமாக்கொடுத்ததின் நிமித்தமாகவாவது உண்டாகிறமாறுதல்கள் பெரும்பாலும் சிறிது காலத்திற்கு மாத்திரம் இருப்பவைகளாதலால் நகல் தயார்செய்யாமலே தீர்வைவிதிக்கும்பொருட்டு அளந்துமாத்திரம் பார்த்துக் கொள்ளலாம்.

சப் நம்பர்களையாவது எழுத்துகளையாவது சப்டிவிஷன்களுக்காக உபயோகித்தால் புலங்களைச் சப்டிவிஷன் செய்யும் வேலை மிகவும்நன்றாய்நடந்தேறும்.

18[illegible]ஆம் ஜனவரி௴ 21௳ புன்னசெகதியுனா ஆர்டர்.

சம்மன் நிராகரிப்பது.

சட்டப்படித் தருந்தவராயிருக்கிற யாதொருசர்க்கார் உத்தியோகஸ்தரிடத்திலிருந்து வருகிற சம்மன், நோட்டீஸ்,

கட்டளை அல்லது விளம்பரத்தின்படிக்கு ஒருகாலத்தில் ஓரிடத்திலே எவன் சட்டப்படி நேராய் ஆஜராக வேண்டியவனாவாவது தனக்காக ஏஜண்டை ஆஜர்படுத்தவேண்டியவனாகவாவது இருக்கிறானோ அவன் அந்தக்காலத்தில் அவ்விடத்திலே வேணுமென்று ஆஜராகாவிட்டாலும் ஆஜராகவேண்டிய இடத்திலிருந்து நியாயமாய்ப்போகவேண்டிய காலத்திற்கு முன்னமே போய்விட்டாலும அவன் ஒரு மாதத்திற்கு அதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது வெறுங்காவலில் வைக்கப்படுவான். அல்லது ஐந்நூறு ரூபாய் வரையில் அபராதத்திற்குள்ளாவான். அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுவான். யாதொரு கோர்ட்டில் நேராய் எவனாவது அவனுக்காக ஏஜண்டாவது ஆஜராகும்படி சமமன் முதலானவை பிறப்புவிக்கப்பட்டிருந்து அந்தப்படி ஆஜராகாவிட்டால் அவன் ஆறுமாதத்திற்கு அதிகப்படாமல் எவ்வளவு காலத்திற்காவது வெறுங்காவலில் வைக்கப்படுவான். அல்லது ஆயிரம் ரூபாய்வரையில் அபராதத்திற்குள்ளாவான். அல்லது இரண்டு தண்டனைக்கும் உட்படுவான்.

இந்தியன் பினல் கோட் 174வது செக்ஷன்.

திருஷ்டாந்தம்.

(a) சென்னபட்டணம் சுப்ரீம் கோர்ட்டில் பிறப்புவிக்கப்பட்ட கட்டளையின்படி சட்டப்பிரகாரம் அந்தக்கோர்ட்டுக்கு முன் ஆஜராகவேண்டியவன் அந்தப்படி வேணுமென்று ஆஜராகாவிட்டால் இந்தப்பிரிவில் சொல்லியிருக்கிற குற்றத்தைச் செய்தவனாகிறான்.

(b) யாதொரு ஜில்லாஜட்ஜியினாலே பிறப்புவிக்கப்பட்ட சம்மன்படிக்குச் சட்டப்பிரகாரம் அந்த ஜட்ஜிக்குமுன் சாக்ஷியாக ஆஜராகவேண்டியவன் அந்தப்படி வேணுமென்று ஆஜராகாவிட்டால் அவன் இந்தப்பிரிவில் சொல்லியிருக்கிறகுற்றத்தைச் செய்தவனாகிறான்.

(c) யாதொரு கிராமமுன்சிபு கோர்ட்டில் பிறப்புவிக்கப்பட்ட சம்மன்படிக்கு அந்தக் கோர்ட்டுக்குமுன்பாக ஆஜராக

வேண்டியவன் அந்தப்படி வேண்டுமென்று ஆஜராகாவிட்ட[illegible] அப்படிப்பட்டவன் இந்தப்பிரிவில் சொல்லியிருக்கிற குற்றத்தைச் செய்தவனாகிறான்.

சென்னைப்பட்டணம் ஐகோர்ட்டாருடைய புரொஸிடிங்ஸில் அடியிற்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது—

மஹாராணியார்—வசதி இராமசந்திரப்பா-வகிரி இந்தியன்லாரிப்போர்ட்டு 6. சென்னை. 219.

யாதொரு கிராமமுன்சிப் அநுப்பிய சம்மனுக்கு ஆஜராகாமல் நிராகரிக்கப்பட்டு அப்படிப்பட்ட விஷயங்களில் பினல்கோடின்படி பிராஸிக்யூஷன் செய்யப்பட்டால் கிரிமினல் கோர்ட்டார் அதற்குத்தக்கபடி நடத்தவேண்டும்.

ஓர் எச்சரிக்கை.

கிராமமுன்சிப் கோர்ட்டாருடைய சம்மன்படி தாங்கள் ஷை கோர்ட்டில் ஆஜராகவேண்டியதில்லையென்று இதரவட்டங்களிலுள்ள சிலகர்ணங்களும் கிராமமுன்சிபுகளும் நினைக்கிறார்கள், அந்தப்படி சாட்சிகளாகச் சம்மன் செய்யப்படும் இதர கிராமங்களின் கர்ணங்களும் கிராமமுன்சீபுகளும் இதரர்களைப் போலவே தங்களும் சம்மன்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் இல்லாவிட்டால் தாங்களும் இதரர்களைப்போலவே பினல் கோடின்படி பிராசிக்யூஷன் செய்யப்படுவதற்குள்ளாவார்களென்றும் தெரிந்துகொள்ள வேண்டியது.

“எப்போதகத்[illegible]றினைவாங்கிடாவில்லை
கைப்போ[illegible]கத்தின் கழல்.”

கடல்புடை சூழ்ந்த இந்நிலவுலகின்கண் பல வளங்களாலும் நிறைவுற்ற இவ்விந்தியா முதலிய பல தேசங்களையும் ஏக சக்கிராதிபத்தியமாய் ஆண்டுவருகிற நமது காருண்ய ஆங்கிலேய அரசாங்கத்திற்குப் பற்பல வருவாய்களிருப்பினும் அதிக வருவாயுள்ளது நிலவரி ஒன்றே. அதை விர்த்திசெய்து வசூலிக்கக்குறைந்த சம்பளத்தில் தகுந்த அதிகாரத்துடன் கர்ணம் முனிஸீப் முதலிய பல உத்தியோகஸ்தர்களை நியமித்து வரி

இதுநாளை வருவித்து மிக்க சாதுர்யமாய் நடைபெற்றுவருகிற இவ்வரசாங்கத்தில் ஸிவில் இஞ்சினீயரிங் ஸால்ட் ஆப்காரி கஸ்டம் பாரஸ்டு போலீஸ் போஸ்டல் லோகல்பண்டு முதலிய டிபார்ட்மெண்டுகளிலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட சிறு உத்தியோகஸ்தர்களை நடத்தி வருவதைப்பார்க்கிலும் இராஜாங்கத்துக்கே இன்றியமையாததும் புராதனமுமாகிய ரெவினியூ டிபார்ட்மெண்டின் மேலதிகாரிகள் தங்கள் கீழுள்ள கர்ணம் முனிசிபுகளைப் பெரும்பாலும் சீரற்ற நிலைமையில் நடத்திவருகிறார்கள் என்பது பொதுஜனங்களின் அபிப்பிராயமாயிருக்கிறது. அவ்விதம் நடத்திவருவது நாகரிகம் நிறைந்த நமது ராஜாங்கத்துக்குத் தகுதியல்லவாகையால் இக்குறைகளையும் இந்த டிபார்ட்மெண்டார் செய்துவரும் ஒழுங்கீனங்களையும் எவ்விதத்தினால் நிவர்த்தி செய்து கொள்ளலாமென்று நீண்டகாலமாய் மனதிற் கவலைகொண்டு நமதிஷ்டர்களுடன் பலகாலாய் ஆலோசித்தும் ஒன்றும் தோற்றாது கவலைகொண்ட காலத்து "இழுக்கலுடையுழியூற்றுக்கோல்" போன்று எனதன்பிற்குரியனையிற்சிறந்த நமது கோதண்டபாணித்தஞ்சராயரவர்களும் என்னைப்போலவே மனக்கவலைகொண்டு பலவாறாயப் பலரிடம் யோசித்து இவ்விங்கிலாந்து எதனால் அதிக நாகரீகத்தையடைந்து மேன்மையுற்றுவருகின்றதோ அதனைகொண்டே இக்குறையையும் நிவர்த்தி செய்துகொள்ளலாமென்று துணிந்து தனது பொருள் காலம் சுகம் முதலிய நஷ்டங்களையும் நோக்காது "நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப்போற்றாது புத்தேளுலகு" என்னும் திருவாக்கையே குருவாக்கியமாய்க்கொண்டு புகழ் ஒன்றினையே கருதி 1889-ஆ மார்ச்சுமாதத்தில் "கிராமாதிகாரி" என்னும் பெயர்கொண்ட மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை ஒன்று வெளிவருமென்றும் அதன்மூலமாய் மேற்சொல்லிய குறைகளை நிவர்த்திசெய்துகொள்ளலாமென்றும் பின்னும் சில விவரங்களுடன் விளம்பரம் வெளியிட்டு கிராமக்கிராம[illegible]பால்மேலமாயும் ஏற்றுண்டு. சேமமாய் [illegible]

[illegible]

கண்ட அரவிந்தம்போல மனக்களிப்புடன் பத்திரிகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பத்திரிகைக்கு வேண்டிய ஸகாயொப்பங்கள் சேராமையால் குறிப்பிட்ட அக்காலத்திலும் பிற்காலங்களிலும் பத்திரிகை வெளிவராமலிருந்ததைக் கொண்டு நம்மனோர் பலரும் ஐயமுறற்கேதுவாயிற்று. எனினும் நமது நண்பரோ, மனவூக்கம் கொஞ்சமேனும் தளராது பத்திரிகை வெளிவரவேண்டிய தொண்டிலமட்டில் மனதைச் செலுத்தி வேண்டிய முயற்சி பலவும் செய்து "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" எனும் நாயனார் திருவாக்கிற் கிலக்கியராய் இப்போது தமது கோரிக்கையை நிறைவேற்றிப் பத்திரிகையைத் தமது ஏராளமான பொருட்செலவோடும் சரீரப் பிரயாசையோடும் வெளியிட்டிருக்கும் இக் "கிராமாதிகாரி" எனும் மாதத் தமிழ்ப்பத்திரிகையானது கிராம உத்தியோகஸ்தர்கள் மனதைச் சந்தோஷிப்பித்தும் அவர்களுடைய குறைகளை நிவர்த்தித்தும் நல்லஸ்திதியில் இருக்கும்படி செய்வித்தும் மேலான அதிகாரிகள் இவர்களை ஒழுங்காய் நடத்தும்படி செய்வித்தும் இன்னும் பொதுவாய்ப் பல ஜனங்களுக்கும் பலவித உதவியையும் அறிவையும் மேலும் மேலும் விர்த்திசெய்துகொண்டு செல்வச் சிரஞ்சீவியாய்த் தீர்க்காயுசுடன் நீடூழிகாலமும் பல்லோராகங்களிலும் களங்கமறவிளங்கும் இளஞ்சூரியனைப்போன் றுலாவி வரும்படிக்கும் அதற்கும் "சாதுனியின்றி யொன்றைச் சாதிப்பாருலகில்லை" ஆகையால் கையொப்பகேயர்களின் கைப்பொருளுதவியின்றிக் கூடாதாதலின் ஒவ்வொரு ஜனங்களையும் தம்மாலியன்ற பொருளுதவிசெய்து கையொப்பதாரர்களாய்ச் செய்விக்கும்படிக்கும் அவ்வுதவியைக்கொண்டு மாதமொருமுறை இருமுறை மும்முறையாக விர்த்தியாகும்படிக்கும் எம்முறையானாலும் தம்முறைப்பாட்டை யறிவிக்கும் கல்லுரைகளைத் தம்மேற்கொண்டு உலாவிவரும்படிக்கும் எல்லாம்வல்ல வல்லபவிநாயகர் குஞ்சிதபாதங்களை நெஞ்சிற் கொண்டு வாக்குக் காயங்களால் வணங்கித் துதித்து இம்முயற்சி முற்றுப்பெற நம்மு அன்பர்களுக்குப்பலவித உதவிபுரிந்தும் மனநசன[illegible]லன "உடுக்கை யிழந்தவன்கைபோலாங்கே இடுக்க[illegible]க" நண்பினரும் கையொப்ப அபிவிர்த்தியி[illegible]

மெய்யொப்பச் செய்தவரும் செய்து வருபவருமாகிய தஞ்சாவூர் தாலுகா கூனன்பட்டி நேசரவர்களுக்கும் கள்ளக்குறிச்சித்தாலுகா கஸ்பா அன்பர் அவர்களுக்கும் இன்னோரன்ன பல்லோருக்கு மெமது அதிபரின் வந்தனத்துடன் எனது வந்தனத்தையுந்தந்து இவ்விஷயத்தை இம்மட்டோடு நிறுத்துகின்றனன்.

தண்டபாணித்தொண்டன்

பரீட்சைக்கேள்விகள்.

1. எந்த சந்தர்ப்பத்தில் கிராமக்கோர்ட்டார் ரூ 200 வரையிலுள்ள வியாச்சியத்தை விசாரணை செய்து தீர்மானிக்கலாம்?

2. கிராமக்கோர்ட்டில் வியாச்சியத்தை எப்படித் தாக்கல் செய்து ஆரம்பிக்கவேண்டியது?

3. கிராமக்கோர்ட்டார் விசாரணை செய்கிற சாட்சிகளைப் பிரமாணஞ் செய்விக்கவேண்டுமோ?

4. அப்படியானால் ஒரு ஹிந்து சாட்சியை எப்படிப் பிரமாணம் செய்விக்கவேண்டும்?

5. கிராமக்கோர்ட்டாருடைய தீர்ப்பு நிறைவேற்றப்படும் விஷயத்தில் பிராஸஸ் கட்டணம் எவ்வளவு செலுத்தவேண்டும்? அது எப்படிச் செலுத்தப்படவேண்டியது?

6. கிராம மாஜிஸ்திரேட்டுகள் தங்கள் கிராமங்களில் குற்றம் நடந்ததாகத் தெரியவந்தவுடன் என்ன செய்யவேண்டும்?

7. கிராம மாஜிஸ்திரேட்டுகள் எந்தச் சந்தர்ப்பத்தில் தாங்களே சோதனை போடலாம்? சோதனையில் சந்தேகப்பட்ட தஸ்துவும் அகப்பட்டால் என்னசெய்யவேண்டியது?

8. கிராம நத்தத்தில் ஒருவன் சாகுபடிசெய்தால் என்னசெய்யவேண்டியது?

9. ஒருபோக நன்செய் நிலத்தில் மூன்றாம்போகம் நன்செய் சாகுபடி செய்து சர்க்கார் ஜலம் பாய்ச்சப்பட்டால் அதற்கு விதிக்கவேண்டிய தீர்வை என்ன?

10. நன்செய் நிலத்தில் சர்க்கார்ஜலம் பாய்ச்சப்பட்டு இரண்டாம் போகம் புன்செய் சாகுபடிசெய்தால் அதற்கு என்ன தீர்வை விதிக்கவேண்டியது?

1308-ம் பசலியின் ஜமாபந்தி ரிப்போர்ட்டு.

1308-ம் பசலிக்கு ரெவினியூ போர்ட்டாரால் அனுப்பப்பட்ட ஜமாபந்தி ரிப்போர்ட்டின்மீது கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தை அடியிற் சுருக்கி எழுதுகிறோம்:—

போர்ட்டாருடைய ரிப்போர்ட்டு சென்ற வருஷத்தைப்போலவே காலத்தில் கிடைத்தது. ஜில்லாக்களில் சில பாகங்கள் தவிர, மற்ற இடங்களின் காலநிலை விவசாயத்திற்கு அநுகூலமாகவேயிருந்தது. உணவு தானியம் சாகுபடிசெய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம், சென்ற வருஷத்தைக்காட்டிலும் 80,000 ஏகராக்கள் அதிகப்பட்டன; கார் தானியம் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம், சென்ற வருஷத்தைக் காட்டிலும் 4,20,000 ஏகராக்கள் குறைந்தன. நெல், சோளம் இந்த இனங்களில் அதிகமும், பருத்தி, அவுரி, எள்ளு இந்த இனங்களில் குறைவும் ஏற்பட்டது. பிரஸ்தாப பசலியில் இறந்தவர்களின் சங்கியை 685,483. வாந்திபேதி, அம்மை, ஜுரம், வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்போக்கு இக்காரணங்களினால் இறப்பது குறைவுபட்டிருக்கிறது. கிராமாந்தரங்களில் ஜனன மரணப்பதிவுசெய்வது குறைவாயிருக்கிறது. 1899-ஆம் வருஷத்திய 3-வது ஜனன மரணப்பதிவு ஆக்ட் சில ஜில்லாக்களில் அநுஷ்டானத்திலிருக்கிறது; மற்ற ஜில்லாக்களிலும் அமுலுக்குக்கொண்டுவரப்படும். தீர்வை போடப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம், 3,865,257 ஏகராக்கள்; ரிமிஷன் செய்யப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம், 52,320 ஏகராக்கள். மொத்தபேரிஜ்; ரூ. 438 லக்ஷம்சில்லரை; இதில் ரெமிஷனானது, ரூ. 16-லக்ஷம் சில்லரை; இருபோக சாகுபடியின் ரிவினியூ ரூ. 35 லக்ஷம் சில்லரை; மற்ற இனங்களும்சேர்த்து டிமாண்டு பிறப்பிக்கப்பட்டது, ரூ. 548 லக்ஷம். ரிவினியூ வசூல் செய்வதற்கு அடியிற்கண்டபடி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது.

டிமாண்டு நோட்டீசுகளின் சங்கியை	64,23,859
ஜப்தி ,, ,, ,,	4,37,416
ஏலம் ,, ,, ,,	2,75,606
ஜப்தி செய்யப்பட்ட பாக்கிதாரர்கள்	4,37,416
ஜப்தி செய்யப்பட்ட பாக்கித்தொகை ரூ.	32,00,282
ஏலம் போடப்பட்ட பாக்கிதாரரின் சங்கியை	18,287
ஏலத்தில் கிடைத்த தொகை ரூ.	2,52,741
ஏலம் விடப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம், ஏகராக்கள்	60,806
[illegible] லத்தில் எடுக்கப்பட்டது	29,061

15

கிராமமாஜிஸ்டிரேட்டுகளும் போலீசாரும்.

போலீசார் மாஜிஸ்டிரேட்டினுடைய அதிகாரத்திற்குட்பட்டவர்கள் என்றுசட்டம்விதிக்கிறது. கிராமமாஜிஸ்டிரேட்டுகளையும், மாஜிஸ்டிரேட்டு என்று இந்த சந்தர்ப்பத்தில் அர்த்தம் செய்யலாமென்று சட்டத்தினுல் ஏற்படுகிறது. இவ்விஷயத்தை அநேக கிராம மாஜிஸ்டிரேட்டுகள் அறியாமல், போலீசாரைக்கண்டு பயந்து அவர்களைத் தெய்வமாக வணங்கி வருகிறார்கள். இங்கிலீஷ் கவர்ன்மெண்டின் விர்த்திக்கு ஆதாரம் கிராம பரிபாலனம். கிராம பரிபாலனம் நன்றாய் நடைபெறுவதற்கென்றே கிராம உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கொலை முதலிய பெரிய குற்றங்கள் நடந்தவிஷயங்களில் நீதிபரிபாலகர்கள் கிராம மாஜிஸ்டிரேட்டுகளுடைய சாக்ஷியத்தையே நம்புகிறார்கள். அவ்விதமாக மதிப்பு வைக்கப்பட்டிருக்கிற கிராம மாஜிஸ்டிரேட்டுகளில் சிலர் ஒரு குற்றம் நடந்தவுடன் போலீசாருக்குப் பயந்து நடவடிக்கை நடத்திவருவது வெகு விநோதமாயிருக்கிறது. "ஓடுகிறவனைக்கண்டால் விரட்டுகிறவனுக்கு எளிது" என்கிறபடி தங்களுடைய அதிகாரம் இன்னதென்று அறியாத சில கிராம மாஜிஸ்டிரேட்டுகளிடம் போலீசார் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகிறார்கள்! அதற்குக் காரணம், சம்பந்தப்பட்ட கிராமமுன்சீபுகள் தங்கள் கௌரவம் இன்னதென்பதையும் போலீசாருடைய அதிகாரமும் கடமையும் இப்படிப்பட்டதென்பதையும் தெரிந்துகொள்ளாமலிருப்பதே. இப்பெருங் குறைவால் நேரிடும் கெடுதிகள் பல உள. அப்படிப்பட்ட அறியாமையை அந்தக் கிராமமுன்சீபுகளிடமிருந்து விலக்கச்செய்து அவர்களை அறிவாளிகளாக்குவதற்கு நமது காருண்ய கவர்ன்மெண்டார் அவர்கள் சிலவருஷங்களாக் கரணங்களைவருஷத்திற்கொருமுறை அங்கங்கே சர்வே பள்ளிக்கூடங்களைக்கூட்டி சர்வே கணக்குகளைக் கற்றுக்கொடுத்து பரீக்ஷைசெய்துவருவதுபோலக் கிராமமுன்சீபுகளையும் அவ்வவ்விடங்களில் வருஷத்திற்கொருமுறை சேர்த்து அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களைக் கற்பித்துப் பரீட்சித்துவரில் இவ்வித பெருங்குறை முற்றும் நிவர்த்தியாகுமென்பதிற் சந்தேகமில்லை.

வர்த்தகம்.

பலவகையான சௌகரியங்களையும் கருத்தக்[illegible]யும் கொண் மேலானவர்களாலும், நூல்களாலும்கூறப்பட்டவாறு, விவசாயம்என்னும் தொழிலிற் சிறந்த வர்த்தகமானது உலகத்[illegible]ல்களிலும்

மிகவும் சிறந்தது. ஒருவனுடைய அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டங்களை இத் தொழில்தான் எளிதில் மற்றையருக்கு எடுத்துக்காட்டும். ஒருவன் அளவு கடந்த தனவானாவதற்கு இத்தொழிலாலின்றி வேறுதொழிலால் கூடாது. திருஷ்டாந்தமாக தொழிலில் உத்தமமென்று கூறப்பட்ட பயிர்ச்செயல் தொழிலில் முயல்வோனொருவன் தாழ்வின்றி ஊக்கத்துடன் பாடுபடினும், காலமனுகூலம் கைகூடினும் ஐந்துகலக்கிலேயும் ஓர்புலத்தில் அதிகமாக ன்றுமடங்கு பலனைப்பெறக்கூடும். இத்தொழிலிலோவென்றால் எல்லை ற லாபத்தையடையக்கூடும். எக்காலங்களிலும் உலகத்தில் அளவு ந்த பணக்காரர்களாயிருப்பவர்கள் இத்தொழிலுடையவர்களாகவே யிருக்கிறார்கள். இப்பொழுதும் இந்தியாவிலும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய கண்டங்களிலும் குபேரசம்பத்தாயிருக்கிறவர்கள் வியாபாரத் தொழிலுடையவர்களாகவேயிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்தவிஷயம். இத்தொழிலுக்கு கல்வியும் யூகமும் தந்திரமும் செவ்வையாய்வேண்டும். முயற்சியும் தேகவுழைப்பும் மட்டில் போதாது; ஒருமுறை இரண்டுமுறைகளில் மனப்பின்னிடைவு இன்றி விடாமுயற்சியும் மனவூக்கமும் வேண்டும். இத்தொழிலால் விசேஷநாகரீகமும் பலவித லௌகிக அனுபவங்களும் உண்டாகும். கல்வியிலும் நாகரீகத்திலும் செல்வத்திலும் மேம்பட்டுவிளங்கும் தேசத்தாரெல்லாரும் இத்தொழிலினிடத்திலேயேயிருக்க அருமையையும் பெருமையையும் பாராட்டி இத்தொழிலையே விசேஷித்து நடத்திவருகிறார்கள். சாதாரணமாய் பெரும்பாலும் நமது இந்தியர்கள் கல்விகற்று எவ்வகையிலும் புத்தியும் திறமையும் உடையவர்களானதால் இராஜாங்கத்தில் ஒரு உத்தியோகத்தை அடையும்பயனுக்கேயென்று கருதுகிறார்கள். பலனாவதொரு தொழிலுமின்றி அலைந்தும் காத்திருந்தும் மாதமொன்றுக்குப் பதினைந்துரூபாய் சம்பளமுள்ள ஒரு உத்தியோகத்தை அடையும் ஒருவர், அதற்கிருமடங்கு அடையத்தக்க ஓர் வியாபாரத்தொழிலைக் கைக்கொள்ளுதல் தாழ்வென்றும் மதிப்பற்றதென்றும் நாம் இவ்வளவு பாடுபட்டு தேசபாஷை இராஜபாஷை முதலியவற்றைக் கற்றுத்திறமைசாலியானது உத்தியோகமின்றி வியாபாரஞ்செய்வதற்காவென்றெண்ணி அதில்பிரவேசிக்கப்பின்வாங்குகிறார்கள். இப்படிக்கருதுதல் மதியுடைமையோ அல்லது இன்மையோவென்பதை விவேகிகள் சொல்லவேண்டும்.

(இன்னும்வரும்.)

ஓர் விண்ணப்பம்.

பட்டுக்கோட்டை டிவிஷன் டிப்டிகலெக்டர் அவர்கள் சமுகத்திற்கு.

கனம் தங்கிய ஐயா,

சென்ற மூன்றாம் வருஷத்தில் பட்டுக்கோட்டைத் தாலுகா மதுக்கூர் ஜமீன்தாரவர்கள் [illegible] த்தவேண்டியசர்க்கார்கிஸ்தி பாக்கியை வசூ

16

செய்வதற்காக ஷை தாலூகா தாசில்தாரவர்கள் டிமாண்டு பிறப்பித்து அதை நிறைவேற்றும்படி மேற்படி தாலூகா கச்சேரி டபேதார், பாப்பாரூபி ஜமீன் இலாகா கிராமமுன்சீபுகள் இருவர், இவர்களுக்கு அனுப்பி அதில் மதக்கூர் ஜமீன் இலாகா ஆம்பளாபட்டு கிராமத்திலுள்ள மிளகாய் மகசூலை ஜப்திசெய்யவேண்டுமென்று குறிப்பிட்டு உத்திரவு எழுதியிருந்தார்கள். அவ்வுத்திரவுப்படி மேற்கண்ட மூன்று உத்தியோகஸ்தர்களும் மிளகாய் மகசூலை ஜப்திசெய்து தாலூகாவுக்குக் கணக்கு அனுப்பிவிட்டார்கள். அந்த மகசூல் ஜமீன்தார் அவர்களுக்குச் சொந்தமல்லவென்றும், குடிகளுக்குமாத்திரம் ஏகதேசத்தில் சொந்தமென்றும் அதை ஜப்திசெய்தது பிசகென்றும் அப்படிச் செய்தவிஷயத்தில் தாசில்தார்அவர்கள் உள்பட ஜப்திதார்கள் நியாயவிரோதமான நடவடிக்கை நடத்தினார்கள் என்றும் பட்டுக்கோட்டை டிவிஷன் டிப்டிகலெக்டர் அவர்கள் அபிப்பிராயப்பட்டு அவசரமாய் இரண்டு கிராமமுன்சீபுகளையும் தாலூகா டபேதாரையும் மறுஉத்திரவு வரையில் சஸ்பெண்டு செய்துவிட்டு, மேலதிகாரிகளுக்கு எழுதித் தாசில்தார் அவர்களையும் சஸ்பெண்டு செய்வித்தார்கள். பிறகு தாசில்தார் அவர்கள் அப்பீல் செய்ததின்பேரில் சஸ்பெண்ஷன் ரத்தாகிவிட்டது. தாலூகா டபேதாரோ சிலகாலஞ்சென்று டிப்டிகலெக்டரவர்களிடமே அனுமதிபெற்று வேலைபார்த்துவருகிறாராம். இது இப்படியிருக்க, தாசில்தாரவர்களின் உத்திரவுப்படி தங்கள் கடமையைச் செலுத்தின நிரபராதிகளான கிராமமுன்சீபுகளுக்கு மட்டும் இதுவரையில் உத்தியோகங்கிடைக்காதது மிகவும் நியாயமற்றதாகவிருக்கிறது. கிராமமுன்சீபுகள் விஷயத்தில் இவ்வளவு உபேக்ஷை செய்யப்பட்டுவந்தால் இந்த நடவடிக்கைகளைப் பார்த்திருக்கும் கிராமாந்தரங்களிலுள்ள கண்ணியவான்களும் கல்விமான்களும் எப்படிக் கிராமமுன்சீப் உத்தியோகத்திற்கு வர விரும்புவார்கள். அப்படி விரும்பாவிட்டால் கனம் தங்கிய நம் கவர்ன்மெண்டாரவர்கள் கருத்துக்கு ஒவ்வாதவிதமாக நிரக்ஷரகுக்ஷிகளையே நியமிக்கவும் அதனால் கிராமபரிபாலனம் கேடு அடையவும் மார்க்கம் ஏற்படுமன்றோ? ஆகையால் பிரபுக்கள் தயவுசெய்து பிரஸ்தாபக்கேசில் உள்ள நியாயங்களைக் கவனித்து நிரபராதிகளான கிராமமுன்சீபுகளுக்கு அவர்களுடைய உத்தியோகத்தைக்கொடுத்து உதவக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உண்மையுரைப்போன்,

ஓர் திருப்பம்.

இப்போது நடந்துவரும் புது ஏற்பாட்டில் கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளம் 4-[illegible] வகுத்திருப்பதில் ஜாஸ்தி சம்பளமுள்ள

வட்டத்தின் கிராமவுத்தியோகஸ்தர்களில் சிலர் வேலைபார்க்கத் திறமையற்றவர்களாகவும், கம்மி சம்பளமுள்ள வட்டங்களின் கிராமவுத்தியோகஸ்தர்களில் சிலர் வேலைத்திறமையுள்ளவர்களாகவுமிருக்கிறார்கள். அதைப்பரிசீலனைசெய்தும், சர்வேசிஸல்ட்டைக்கவனித்தும் கர்ணங்களை மாற்றவேண்டும்.

அநேக வட்டங்களில் கர்ணங்களுக்கும், முன்சீப்களுக்கும் ஒற்றுமையில்லாமல் குடிகளுக்குப் பற்பல இம்சையும் மேலான அதிகாரிகளுக்கு வேலைத் தொந்திரவுமுண்டாகிறது.

மேற்கண்ட காரணங்களை முன்னிட்டு இப்புதிய ஏற்பாட்டில் யாதொருவிதமான ஒழுங்கும் செய்யாததால் அநேக கிராம உத்தியோகஸ்தர்கள் நிரம்பவும் கஷ்டப்படுகிறார்கள்.

கிராம உத்தியோகஸ்தர்கள் அதிக ஒற்றுமையில்லாதது, வெட்டிவேலைக்காரர்களுக்கு ஸால்ஜாப்புசொல்லி வீண்காலத்தைக்கழிக்க ரொம்பசௌகரியமாகவுமிருக்கிறது.

புதுவெட்டி அஸாமிகள் முன்சீப் உத்திரவுப்படி வேலைபார்த்த போதிலும்கர்ணங்களுடைய உத்தரவுப்படி ஸ்திரமாயிருந்துவேலைபார்க்கும்படி ஒருவனையாவது ஏற்படுத்தி அட்டென்டென்ஸ் ரிஜிஸ்டர்வைத்தல் முதலிய நடவடிக்கையும் நடத்தும்படி செய்யவேண்டும். இந்தப்படிசெய்யாததால் கர்ணங்களுக்கு வேலை சரியாய்நடத்தக்கூடவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு வட்டம் 2-3-மைல் தூரமுள்ளதாகயிருப்பதில் கர்ணங்களிருக்குமிடத்திற்கும், முன்சீப்களிருக்குமிடத்திற்கும் தலைதூரமாயிருக்கிறது. மேலானவிடத்திலிருந்து அவசரமாக அநேக உத்திரவு முதலியவைகள் வந்துகொண்டிருக்கின்றன. அதின்படி நடக்க அஸாமிகள் கைவசமில்லாததால்தாமதப்படுகிறது. வெட்டிகள் வேண்டுமென்றால் தலையிலிருக்கும் முன்சீபுக்கு தன் சொந்தமனிதர்களையாவது அல்லது தலையாட்களையாவது அனுப்பி முன்சீபுகள் டியூட்டியின்பேரில் வெளியில் போயிருந்தால் அவர்களிருக்குமிடம் தேடிப்போய் அனுமதிபெற்று வெட்டியைத்தருவித்துக்கொண்டுவேலைசெய்யவேண்டியதாயிருக்கிறது. அப்படி அனுமதிகொடுப்பதும் ஒற்றுமையாகவிருந்தால்தான்.

இப்போது இந்த தாலூகாவில் ஏற்பட்டிருக்கும் தபால் சிஸ்டமானது ரொம்பவும் நல்ல ஏற்பாடேதான்.

அவைகளில் மேலானவிடங்களிலிருந்துவரும் உத்திரவு முதலியவைகள் கர்ண… ன்சீப் இவர்களுக்கென்று போட்டுவருகிறது. அப்-

டிக்குப் போட்டுவரும் உத்திரவு முதலியவைகளை கிராமமுன்சீப்களில் சிலர் தாமாகவே கவர்களையுடைத்தும் தனி உத்திரவுகளை பயில் செய்து கொண்டும் வருகிறார்கள். அது சரியல்ல. இதுவிஷயத்தில் முக்கிய ஜவாப்தாரி கணக்கர்களே யாதலால் முன்சிப்புகள் கவர்களை உடைக்கவேண்டியது அனுவசியமென்று நினைக்கிறேன். உத்திரவுகளைப் பார்த்துக்கொண்டு இன்ஷியல்செய்தும் உடனே பயிலுக்கு கணக்கனிடமனுப்பிவிடவேண்டும். இதுவிஷயத்தில் புகாருக்கு இடமின்றி ஏற்பாடுசெய்யவேண்டும்.

வில்லேஜ்மானியூல் பாரப்படிக்குள்ள கணக்குகளை சரிவர தயார் செய்யாமல் அனேகர் அவரவர்களிஷ்டப்படி வேலைசெய்துவருகிறார்கள். அப்படிக்கு செய்துவருவதின் இந்த டிஸ்டிரிக்ட் முழுதிலும் பார்த்தாலுங்கூட ரான்குவட்டம் கணக்குகளாவது ஒரேவிதமாயிருக்குமென்று நான் நினைக்கவில்லை. இது மெத்த ஆச்சரியம். ஏன் அப்படியிருக்கவேண்டும்? மானியூல்யாவருக்கும் ஒன்றுதானே. கணக்குகளைத் தயார்செய்வதில் யாவரும் ஒரேவிதமாகவும், புஸ்தகபாரமாயும், நல்ல மசியுட்னும் எழுதிக்கக் கூடாதா? இதுவிஷயத்தைப்பற்றி யாவரும் கவனித்து அவரவர்கள் அபிப்பிராயத்தைக்கலந்து யோசித்து வருகிற 1311-ம்பசலி முதல்கொண்டு ஒரே சிஸ்டமாக வேலைசெய்து வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருத்தருப்பூண்டி தாலூகா கிராமவாசி,

சமாசாரக்குறிப்புகள்.

ஒரு நல்ல உத்தரவு:—கவர்ன்மெண்டு ஆபீசுகளில் உத்தியோகத்திலிருக்கும் குமாஸ்தாக்கள் முதலான சிப்பந்திகள் தங்கள் எஜமான்களிடத்தில் படுந்துயரமோ சொல்லிமுடியாது. அன்றியும் சொற்பப் பிழைகளுக்காக கனத்த அபராதங்கள் போடப்படுகின்றன. மனிதருக்குத் தங்கள் வேலையில் பிழைசெய்வது இயற்கையேயாயினும் உத்தியோகஸ்தர்கள் இதைச் சற்றேனும் யோசியாமலே தங்களிஷ்டப்படிச் சிப்பந்திகளைச் சீருமாறு செய்துகொண்டுவருகிறார்கள். இப்போது அவர்களுடைய நல்ல வேளையினால் மேற்படி விஷயம் மேலதிகாரிகளுக்கு எட்டி இந்திய கவர்ன்மெண்டார், அவர்கள்மேல் கருணைகூர்ந்து ஒரு சுற்று நிருபம் எல்லாக்கவர்ன்மெண்டு ஆபீசுகளுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அவ்வுத்தரவின் முக்கிய சாராம்சம் என்னவெனில், குமாஸ்தாக்கள் முதலிய சிப்பந்திகளுக்கு அபராதங்கள் உத்தியோகஸ்தர்கள் விதிக்கக்கூடாதென்பதேயாம். இது நம்முடைய மகாமாட்சிமைதங்கிய இராஜப்பிரதிநிதியவர்களின் மேன்மைக் குணத்தையும் அப்பிரபு நம் இந்தியரின்மேல் பாராட்டும் அன்பையுங்கன்றாய் விளக்குகிறதல்லவா?

எலிகளைப் பிடிக்க பாம்புகளை வளர்ப்பது:—இந்தேசங்களில் வீடுகளிலுள்ள எலிகளைப்பிடிக்கப் பூனைகளை வளர்ப்பதுபோல மொரோக்கோ தேசத்தில் பாம்புகளை வளர்த்து எலிகளைப்பிடிக்கப் பழக்குகிறார்களாம்.

***

ரெவினியூ உத்தியோகஸ்தர்களிடமிருந்து மாஜிஸ்திரேட் அதிகாரத்தைப் பிரித்தல்:—டை இரண்டும் ஒருவரிடத்திலிருப்பதால் மகாஜனங்களுக்கு அதிக கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டுவருகின்றனவென்று நீண்டகாலமாய்ப்புகாருண்டாகி காங்கிரஸ் சபையாரும், சில இங்கிலீஷ் பத்திரிகைகளும், மற்றுள்ளபேரறிவாளரும் இவ்வாறு பிரித்துவிடுவது அவசியமென்று சம்மதங்கொண்டு தன்மேல் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் கமிட்டியார் அவ்விரண்டையும் பிரிப்பது அவசியமென்பதற்குப் பல்விபரங்களையும், ஆதாரங்களையும் எடுத்துக்காட்டி இந்தியா செக்ரிடேரிக்கு ஒரு மனு அனுப்பியதன்பேரில் அந்த மனுவானது இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டு, இந்தியா கவர்ன்மெண்டார் இந்த மனுவின் பிரார்த்தனையைப்பற்றி லோகல் கவர்ன்மெண்டாருடையவும், ஹைகோர்ட் ஜட்ஜிகளுடையவும் மற்றும் சில பெரிய உத்தியோகஸ்தர்களுடையவும் அபிப்பிராயங்களைக் கேட்டிருக்கிறார்கள்.

***

பஞ்சத்தின் போட்டி:—நமது தேசத்தில் 1876-ம் வருஷத்தில் தோன்றிய பஞ்சமானது இரண்டு லெட்சத்து ஐயாயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்களையும், நூற்றைம்பது லெட்சம் பிரஜைகளையும் பீடித்தது. 1896-ம் வருஷத்துப் பஞ்சமானது இரண்டு லெட்சத்து எழுபத்தையாயிரஞ் சதுரமைல் விஸ்தீரணத்தையும் [illegible]த்திருபது லெட்சம்பிரஜைகளையும் பீடித்தது. இந்த வருஷத்துப் பஞ்சமோ நாலு லெட்சத்து இருபதினாயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்களையும் அறுநூற்றிருபது லெட்சம் பிரஜைகளையும் பீடித்திருக்கின்றது. இதனால் 76-ம் வருஷத்துப்பஞ்சத்தை 96-ம் வருஷத்துப் பஞ்சமும், 96-ம் வருஷத்துப் பஞ்சத்தை இந்த 900-ம் வருஷமும் தோற்கடித்ததாகிறதல்லவா? இந்த 900-ம் வருஷத்துப் பஞ்சத்தைப் பின்னரும் எந்தவருஷப்பஞ்சம்தோற்க அடிக்கிறதோ? பஞ்சமென்பதில்லாமல் நம்தேசம் எப்பொழுதும் செழிப்பாய் வாழுங்காலம் எப்பொழுதாவதுண்டாகுமோ? கடவுளறிவார்.

***

ஸ்டாம்பு ரிவினியூ:—நமது சென்னை இராஜதானியில் சென்ற வருஷத்திய ஸ்டாம்பு ரிவினியூ ஜோஷ்பாராவைப் பார்க்க மொத்தம் சுமார் 82½ லெட்சம் ரூபாயாயிருக்கிறது. முந்திய வருஷத்திய ரிவினியூவைப்பார்க்கிலும் 6,323 ரூபாய் ஜாஸ்தியாயிருக்கிறதேயல்லாமல் குறைந்தபாடில்லையென்றால் இத்தனை ரூபாயும் நமது இராஜதானியிலுள்ள குடித்தனக்காரர்களிடமிருந்து கவர்ன்மெண்டார் ஸ்டாம்புக்காக வசூலித்த வகையென்றாகிறது. இதில் சிப்பந்திச் செலவுக்காகவும் வேறு சில்லறைச்செலவுக்காகவும் நாலுலெட்சத்துச் சில்லானம் செலவாயிருக்கிறது. ஆகவே கவர்ன்மெண்டாருக்குச் செலவுநீக்கி லாபம்சுமார் 79½ லட்சமாகிறது.

"GRAMATHIKARI."

A MONTHELY JOURNAL

Containing matters of interest for Village officers & others.

It goes without saying that the ryot is the backbone of the material prosperity of a country like India, which is pre-eminently agricultural. The prosperity of the British Empire in India is inseparably bound up with the prosperity of the Indian agriculturist. For gaining this end, village affairs should be effectually controlled by the Revenue Divisional Officers and the Tahsildars by hearing not only their version of the village affairs but also by listening to the voice of the millions through *organs that exist for that one purpose.* THE "GRAMATHIKARI" will supply this long-felt want and will contain information, facts and hints to Village and Divisional Officers for improving the tone of the village administration which is at present full of loopholes, much to the detriment of the prosperity of the ryot. A copy of this journal will be sent to all Magisterial and Revenue Divisional Officers every month, who it is hoped will encourage and support the undertaking by recommending it to the patronage of all Taluq and Village Officials in their jurisdiction. The journal will co-operate with, and not be hostile to, the Divisional Officers, for furthering the cause of the ryot and for improving rural sanitation, economics, industries and agriculture, and interpreting properly the rulers to the ruled and *vice versa.*

CONTENTS.

1. Ourselves. 2. A want. 3. Village Tapal System in Tiruturaipundy Taluk. 4. Improvement of village administration. 5. An appeal. 6. Explanation of Criminal Proceedings. 7. Village improvement—Vaccination, Sanitation. 8. Revised Standing Orders. 9. Disobeying Summons 10. Influence of the Press. 11. Examination Papers. 12. Jamabandi Report for Fasli 1308. 13. Village Magistrates & the Police. 14. Trade. 15. A prayer to the Deputy Collector of Pattukotta 16. Correspondence. 17. News and notes.

RATES OF SUBSCRIPTION.

Yearly, Village Officers	Rs.	3.
Others	Rs.	4.
Patrons	Rs.	10.

All communications to be addressed to:—
S. KOTHANDAPANI THANJARAYAR,
Proprietor of the "Gramathikari,"
Manakudy, Tiruturaipundy Taluk,
Tanjore District.

1899